பொய்யாமொழிப் புலவர் இயற்றிய

# தஞ்சை வாணன் கோவை

தெளிவுரை

முனைவர் கதிர் முருகு



பொய்யாமொழிப் புலவர் இயற்றிய

# தஞ்சைவாணன் கோவை

## தெளிவுரை

## களவியல்

### 1. கைக்கிளை

காட்சி

**தலைவன், தலைவியைக் காண்பது**

**புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்**
**கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின்**
**அயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை அன்னஞ்செந்நெல்**
**வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலயத்திலே.** 1

**தெளிவுரை:** அன்னப் பறவை, செம்மையான நெற்கதிர்கள், குளம் ஆகியன சூழ்ந்திருக்கும் தஞ்சைவாணனின் பொதிகை மலையில் ஒரு கற்பக மரத்தின் அருகில் ஒரு பசுமையான பொற் கொடி மேகத்தைத் தாங்கிப் பிறையை அணிந்து போர் செய்யும் வில்லுடன் கெண்டைமீன் பொருந்தியிருக்கின்ற தாமரை மலர்ந்து என் கண் எதிரே நின்றது.

### ஐயம்

தலைவியைக் கண்ட தலைவன் இவள் கொடி அல்ல. பெண் என்பதை அறிந்து, இவள் தெய்வப் பெண்ணோ என ஐயம் கொண்டதைக் கூறுதல்.

**பாரணங் கோதிருப் பாற்கடல் ஈன்றபங் கேருகத்தின்**
**ஓரணங் கோவெற் புறையணங் கோஉயர் பாவலர்க்கு**
**வாரணங் கோடி தருந்தஞ்சை வாணன்தென் மாறைவையை**
**நீரணங் கோநெஞ்ச மேதனி யேஇங்கு நின்றவரே.** 2

**தெளிவுரை:** சோலையின் மேலிருந்து புவியில் உள்ளோர் செய்யும் பூசையினை ஏற்றுக்கொள்ளும் தெய்வப் பெண்ணோ! திருப்பாற்கடலில் தாமரை மலரில் வீற்றிருக்கும் ஒப்புமை கூற இயலாத தெய்வப் பெண்ணோ! சிறந்த புலவர் களுக்குக் கோடி யானைகளைக் கொடுக்கும் தஞ்சை வாணனின் தென்மாறை நாட்டில் பெருக்கெடுத்து வரும் வைகை ஆற்றில் தோன்றிய நீரர மகளோ? மனமே! தனியே நிற்கும் இவள் யார் என்று அறிய இயலவில்லையே?

### துணிவு

தலைவி தலையில் சூடியிருந்த மாலை வாடுதல், கண் இமைத்தல் முதலிய குறிகளைக் கொண்டு இவள் தெய்வப்பெண் அல்லள், மானிடப் பெண்ணே என்று தெளிவடைதல்.

**மையார் குவளை வயல்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போல்**
**நையா தொழிமதி நன்னெஞ்ச மேஇனி நம்மினுந்தன்**
**நெய்யார் கருங்குழற் செம்மலர் வாடின நீலஉண்கண்**
**கையால் அழைப்பன போலிமை யாநிற்குங் காரிகைக்கே.** 3

**தெளிவுரை:** மனமே! இப்பெண்ணுக்கு நம்மை விடக் கறுத்து அடர்ந்த கூந்தலில் சூடியிருக்கும் செம்மை நிறமான மலர்கள் வாடியிருக்கின்றன. அதுவல்லாமல் குவளை மலர் போன்ற கண்கள் கையினால் வா என்று அழைப்பதுபோல் இமைக்கின்றன. அதனால் கருமை நிறமான குவளை மலர்கள் மலர்ந்திருக்கும் வயல்களை உடைய தஞ்சை வாணனைப் புகழ்ந்து பாடாத பகைவர்கள் போல் நீ துன்புறாமல் இருப்பாயாக.

### குறிப்பறிதல்

தலைவியின் விருப்பம் அவள் பார்வையில் இருப்பதால் தன்மேல் அவளுக்கு விருப்பம் உண்டு என்பதை அறிவது.

**மன்னிற் சிறந்த புகழ்த்தஞ்சை வாணன் மலயவெற்பில்**
**பெண்ணிற் சிறந்தப் பேதைதன் பார்வை பெருவினையேன்**
**எண்ணிற் சிறந்த இருந்துயர் நோய்தனக் கின்மருந்தாய்க்**
**கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதுங் காட்டியதே.** 4

**தெளிவுரை:** மண்ணுலகில் சிறந்த புகழை உடைய தஞ்சை வாணனின் பொதிகை மலையில் பெண்களில் சிறந்த இப் பேதைப் பெண்ணின் பார்வை பெரிய தீவினையை உடைய என் எண்ணத்தின் மிகுந்த பெரிய வேட்கை நோய் தனக்குத் துன்பம் செய்யாமல் இன்பம் செய்யும் மருந்துமாகி, கண்ணைவிடச் சிறந்த உறுப்பில்லை என்பதையும் காட்டிக்கொண்டிருக்கிறது.

## 2. இயற்கைப் புணர்ச்சி

இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தால் கூடுதல், தலைவியால் கூடுதல் என இரண்டு வகைப்படும்

### இரந்து பின் நிற்க நினைத்தல்

*தலைவன் தலைவியை இரந்து பின்நிற்றற்கு எண்ணுதல்*

**தேங்கிய காதர வாதரஞ் செப்பித்தண் செப்பிணைபோல்**
**வீங்கிய மாமுலை மேவுதும் யாம்விச யக்கொடிமேல்**

**வாங்கிய சாபம் உயர்த்தவன் போர்வென்ற வாணன்வையம்**
**தாங்கிய மாலனை யான்தஞ்சை சூழ்வரைத் தாழ்குழற்கே 5**

**தெளிவுரை:** மனமே! வெற்றிதரும் கொடியின் மேல் வளைவான வில்லை ஏந்தியிருப்பவனாகிய சேர மன்னனின் போரினை வென்ற தஞ்சைவாணன் பூவுலகத்தைக் காத்த திருமாலுக்கு ஒப்புமை உடையவனாவான். தஞ்சையைச் சூழ்ந்திருக்கும் மலையில் இருக்கும் தாழ்ந்த கூந்தலை உடைய பெண்ணுக்கு அச்சம் தரும் காதலைக் கூறி, குளிர்ந்த செப்பினை போன்று பருத்த முலையில் நாம் பொருந்தி இருப்போம்.

## இரந்து பின்னிலை நிற்றல்

*தலைவியை இரந்து இதமான வார்த்தைகளைக் கூறுவது.*

**செறிவேழ வெஞ்சிலை வேள்தஞ்சை வாணன் திருந்தலர்மேல்**
**எறிவேலை வென்றகண் ணென்னுயிர்க் கேவி யிருண்டறல்போல்**
**நெறிவேய் அலங்கன் முடித்தலை சாய்த்திங்ங னிற்பதுதான்**
**அறிவே யறிந்த வுனக்கலர் மாளிகை ஆரணங்கே. 6**

**தெளிவுரை:** அலர் மாளிகையில் வீற்றிருக்கும் அரிய தெய்வம் போன்றவனே! வெற்றி பொருந்திய கரும்பு வில்லைக் கையில் ஏந்தியிருக்கும் காமன் போன்று தஞ்சைவாணன் தன் பகைவர்களின் மேல் எறிந்த வேலினை வெற்றி கொண்ட உன் கண்ணை என் மீது திருப்புகிறாய். கருமை நிற மணல்போல இருண்டு வகிடெடுத்து மலர் முடித்த தலையைத் திருப்பி ஒரு புறமாகச் சாய்த்து நிற்பது எல்லாவற்றையும் அறிந்த உனக்குப் பொருந்துமா? ஏன் இந்த இன்ப வதை?

## முன்னிலையாக்கல்

*தலைவன், தலைவியை முன்னிலையாகக் கொண்டு கூறுதல்*

**வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்தென் மாறைவண்டு**
**கொழுதிய லார்செய் குழன்மட வீர்நுங்குற் றேவல்செய்து**
**தொழுதிய லாயத் தொகுதியோ டாடிச் சுனைகுடையா**
**தெழுதிய பாவையைப் போல்நின்ற வாறென் இயம்புமினே. 7**

**தெளிவுரை:** பாண்டியனின் புகழை மேலும் மேலும் பெருக்குகின்ற தஞ்சை வாணனின் தென்மாறை நாட்டில் நல்ல இலக்கணத்துடன் முடித்த கூந்தலில் வண்டுகள் கோதும் தன்மை உடைய பெண்ணே! உனக்குப் பணி செய்யும் தோழியர் கூட்டத்துடன் விளையாடாமல், சுனையில் குடைந்து நீராடாமல் தீட்டிவைத்த சித்திரப் பாவைபோல நீ நிற்கக் காரணம் என்ன? என்னைக் காப்பாற்றுவதற்காகவா? இப்போதே சொல்லியருள வேண்டும்.

## மெய்தொட்டுப் பயிறல்

தலைவன், தலைவியின் உடலைத் தீண்டி அருகில் செல்லுதல்.

**நல்லார் விழிபோ லிருந்தும் அளியெனு நாமம்பெற்றும்**
**அல்லார் குழலில் அமர்ந்திருந் தாலம ராரைவெல்ல**
**வல்லான் வரோதயன் வாணன்தென் மாறை மதுகரங்காள்**
**தில்லா திடையுமக் கோபழி சால நிலைநிற்குமே.** 8

**தெளிவுரை:** பகைவரை வெற்றி கொள்வதற்காகப் பிறந்த தஞ்சை வாணனின் தென்மாறை நாட்டு வண்டுகளே! நல்லவர்களுக்குக் கண்போலும், அன்பு, இரக்கம் என்னும் பெயர் பெற்றும் இவளுடைய இருள்போன்ற கூந்தலில் அமர்ந்தீர்கள் என்றால் இவளுடைய மென்மைத் தன்மை மிக்க இடை ஒடியும். அதனால் இவள் இறக்க நேரிடும். பெண் கொலைப் பாவம் வந்து சேரும். அதனால் அப்பாவம் உங்களுக்கு வாராமல் நீங்குவீர்களாக.

## பொய் பாராட்டல்

தலைவன், தலைவியிடம் உள்ளதையும் இல்லாததையும் ஒன்றாகச் சேர்த்துக் கூறுவது.

**பருந்தொன்று கூரிலை வேற்படை வாணன் பரிமளப்பூஞ்**
**செருந்தொன்று சோலைத்தென் மாறைஅன் னீர்செழுந் திங்களுங்கள்**
**முருந்தொன்று கோப முகங்கண்டு நாணி முயல்மறுத்தீர்**
**மருந்தொன்று நாடியன் றோவட மேரு வலங்கொள்வதே.** 9

**தெளிவுரை:** பகைவர்களின் உடலைக் கிழித்து அவர்களின் மாமிசத்தைப் பெற்று அது நாற்றம் வீசுவதனால் பருந்துகள் சுற்றிவரும் கூர்மையான வேல் படையினை உடைய தஞ்சை வாணனின் பரிமள மலருடன் செருந்தி மரங்கள் அடர்ந்திருக்கும் தென்மாறை நாடுபோன்று அழகுடைய பெண்களே! முழு நிலவு உங்கள் ஒளி பொருந்திய முகத்தைக் கண்டு தன்னிடம் முயலாகிய கறை உள்ளதால் பொருத்தம் இன்றி நாணம் கொண்டு அக் கறையைத் தீர்ப்பதற்காகத்தான் தினமும் மேரு மலையை வலம் வருகிறதோ?

## இடம் பெற்றுத் தழால்

தலைவி நிற்கும் இடத்திற்கு அருகில் தேனருவியின் ஆற்றங்கரையில் அசோக மரம் நிற்க, பூங்கொடிகள் எங்கும் சுற்றிப் படர்ந்திருக்க, மாதவிக் கொடிகள் மலர்பூத்து வண்டுகளும் தேனீக்களும் குயில்களும் அங்கு பாடிக்கொண்டிருக்க, அவ்வேளை தென்றல் காற்று வீசி மெல்லிய மணல் துகளும் மகரந்தமும் காற்றில்

பரவவும் அதனைக் கண்டு தலைவன் தலைவியைத் தழுவ விருப்பம் கொண்டு கூறுதல். இதுவே பகல் குறிக்கான இடம் என்பதனையும் அறிந்துகொள்க.

**படம்பட்ட வாளர வல்குலி லேதளை பட்ட நெஞ்சம்**
**விடம்பட்ட வாள்பட்ட வேதனை தீரவின் தோய்பொழிலும்**
**தடம்பட்ட வாவியுஞ் சூழ்தஞ்சை வாணன் தமிழ்க்கிரிநாம் 10**
**இடம்பட்ட வார முலைத்தடந் தோய்தற் கிடமிதுவே.**

**தெளிவுரை:** ஒளிபொருந்திய நல்ல பாம்பின் படம் போன்ற அல்குலில் மனம் கொண்ட நெஞ்சமே! விடத்தில் தோய்ந்த வாளால் அறுக்கப்பட்ட துன்பம் தீர வானுயர்ந்த சோலையும், பரந்த குளமும் கொண்ட தஞ்சை வாணனின் பொதிகை மலையில் நாம், மார்பெங்கும் தனக்குரிய இடமாகக் கொண்ட முத்துமாலை அணிந்திருக்கும் முலையாகிய குளத்தில் குளிப்பதற்கு இதுவே சிறந்த இடமாகும்.

## வழிபாடு மறுத்தல்

இரந்து பின்னிற்றல் தொடங்கிப், பொய் பாராட்டல் வரை தலைவன் கூறியவற்றைத் தலைவி மறுத்தல். ஏனெனில் மேற்கூறிய அனைத்தையும் தலைவன் தன் மனத்துக்குக் கூறினானே தவிர வெளிப்படையாகக் கூறவில்லை. எனவே, தலைவி அவற்றை அறியவில்லை.

**தேறாத தெவ்வென்ற வாணன்தென் மாறைச்செந் தேனருவி**
**ஊறாத காலத்து மூறுதண் சார லொதுக்கிடந்தந்**
**தாறாத சோகமும் ஆற்றுதல் வேண்டும் அசோகமெய்தி 11**
**மாறாத தண்ணளி கூர்மலர் வாள்முக மாதவியே.**

**தெளிவுரை:** அசோகமரத்தைச் சுற்றி எப்போதும் குளுமை யுடன் வண்டுகள் வட்டமிட மலர்ந்திருக்கும் குருக்கத்தியே! நீ எனக்கோர் உதவி செய்ய வேண்டும். அது என்னவென்றால், தெளிவில்லாத பகையை வெற்றிகொண்ட தஞ்சைவாணனின் தென்மாறை நாட்டில் செம்மையான தேன் கலந்த அருவி விழாத வேனில் காலத்திலும் நீர் ஊறும் குளிர்ந்த மலையில் நீ இருப்பதனால் எனக்கு ஓய்வெடுக்க இடம் கொடுத்து இவருடைய தீராத துன்பத்தையும் தீர்த்தல் வேண்டும்.

## இடையூறு கிளத்தல்

தலைவி நாணம் கொண்டு கண் மூடியதனால் எழுந்த துன்பத்தைக் கூறுவது.

**சிதையா முளரித் திருமா ளிகையிற் சிறந்ததென்றென்**
**இதயார விந்தத் தினிதிருப் பீரிரு கோட்டொருகை**
**மதயானை வாணன் வருந்தஞ்சை சூழ்வையை நாட்டுறைவோர்**
**புதையார் தனமென்ப தோமதர் வேற்கண் புதைத்ததுவே. 12**

**தெளிவுரை:** குற்றமில்லாத தாமரை மாளிகையைவிடச் சிறந்தது என்று என் இதய தாமரையாகிய வீட்டில் குடிகொண்டிருப்பவரே! இரண்டு கொம்புகளையும் ஒரு தும்பிக்கையினையும் உடைய மதயானையைக் கொண்டிருக்கும் தஞ்சைவாணனின் தஞ்சையைச் சூழ்ந்துவரும் வைகை நாட்டில் உள்ளவர்கள் செல்வம் பெற்றால் அதனைப் புதைக்க மாட்டார்கள். வறியவர்களுக்கு வழங்குவர் என்பது நாட்டு வழக்கு. தனத்தைப் புதைத்து வைக்காமல் நீ மதர்த்த வேல்போன்ற கண்களை மூடிக்கொண்டாய்.

## நீடு நினைந்திரங்கல்

புணர்ச்சி கைகூடாததால் இவள் மனம் எவ்வாறு இசையும் என்று காலம் நீண்டு கொண்டிருக்க, தலைவியை நோக்கித் தலைவன் இரங்கிக் கூறுதல்.

**தமிழ்தங் கியதஞ்சை காவலன் வாணன் தடஞ்சிலம்பில்**
**குமிழ்தங் கியமதிக் கொம்பரன் னீர்குளிர் வெண்ணிலவூ**
**டுமிழ்தண் தரளப் பவளச்செங் கேழ்வள்ளத் துள்ளிருக்கும்**
**அமிழ்தந் தருவதென் றோபெரு வேட்கையென் னாருயிர்க்கே. 13**

**தெளிவுரை:** தமிழ்மொழி வளமாய் நிலைபெற்ற தஞ்சை மன்னனாகிய வாணனின் பெரிய மலையில் குமிழ் தங்கிய நிலவுடைய கொம்பு போன்ற பெண்ணே! (மூக்கு பொருந்திய முகத்தை உடைய கொடி போன்ற பெண்ணே!) பேராசையும் அதிகமான விருப்பமும் கொண்டிருக்கும் எனக்கு உன் பவளம் போன்ற வாயில் ஊறும் அமிழ்தம் போன்ற நீர் தருவது எப்போது என என் மனம் நினைத்து நினைத்துத் துன்புறுகின்றது.

## மறுத்தெதிர் கோடல்

தலைவி, முன்னர் தான் கூறியவற்றை மறுத்துத் தலைவன் கூறியதை ஏற்றுக் கொள்ளுதல்.

**கறையார் இலங்கிலை வேலன்பர் காமக் கடற்கெதிர்ந்த**
**நிறையாம் வரம்பினி நிற்பதன் றானிறை நீருலகை**
**மறையாமல் வன்கலி மாற்றிய வாணன்தென் மாறையினாம்**
**பொறையார் தவஞ்செய்தி லேநெஞ்ச மேயென் புகல்வதுவே. 14**

**தெளிவுரை:** மலையே! இரத்தக் கறை படிந்த இலை போன்ற வேலினை உடைய தலைவனின் காமக்கடல் கரைபுரண்டுவர, அக்கடலுக்கு எதிராக நம்முடைய கற்பைக் காக்கும் அணை அதனைத் தடுக்க முற்பட்டால் நிற்பதில்லை. கடல் சூழ்ந்த உலகில் துன்பம் செய்ய வந்த வறுமையை மாற்றிடும் தஞ்சை வாணனின் தென்மாறை நாட்டுக்கள் காம வேட்கையைப் பொறுக்கத்தக்க தவத்தை நாம் செய்யவில்லை. இனிச் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

## வறிது நகை தோற்றல்

*தலைவி, தலைவன் முன் நாணம் கொள்ளும் தன்மையள் ஆதலால் சிறுநகை புரிதல்.*

**எறிதேன் அலம்புஞ் சிலம்பினெப் போதும் இரந்திவள்பின்**
**வெறிதே திரிந்து மெலிந்தன நாமுள்ள மெல்லியற்குப்**
**பிறிதேகொ லென்னும் பெருந்தகை தேறப் பெரிதுயிர்த்து**
**வறிதே முறுவல்செய் தாள்தஞ்சை வாணன் வரையணங்கே.** 15

**தெளிவுரை:** இறகுகளால் காற்று வீசும் வண்டுகள் எப்போதும் ஆரவாரம் செய்யும் மலையில் இவள் பின்னே நம் குறையைக் கூறிக்கொண்டு பயன் இல்லாமல் அலைந்து உடல் மெலிந்தோம். இவ்விளம் பெண்ணின் மனம் இன்னது என்று அறிய இயலவில்லை. இவளின் மனம் வேறுபாடு கொண்டது என்று சொல்லும் நான் தேறுமாறு பெருமூச்சுவிடும் தஞ்சைவாணனின் பொதிகை மலையின் மலைத்தெய்வப்பெண் போன்ற இவள் ஒன்றும் இல்லாமல் வறிதாய்ச் சிரித்தாள்.

## முறுவற் குறிப்புணர்தல்

*தலைவியின் புன்னகைக் குறிப்பைத் தலைவன் அறிதல்*

**வின்மலை வேலன்ன நன்னுதல் வாட்கண்ணி வேட்கையெண்ணாள்**
**என்மலை வேனென்று மென்னுயிர் தாங்கு மெதிர்ந்தவொன்னார்**
**மன்மலை வேழந் திறைகொண்ட சேய்தஞ்சை வாணன்மஞ்சார்** 16
**தென்மலை வேய்நிக ரும்பெருந் தோளி சிறுநகையே.**

**தெளிவுரை:** போரில் எதிர்த்த பகைவர்களின் நிலைபெற்ற மலைபோன்ற யானையைத் திறையாகப் பெற்ற முருகனை ஒத்த தஞ்சைவாணனின் மேகம் சூழ்ந்த பொதிய மலையில் வளர்ந்த மூங்கிலை ஒத்த தோளினை உடைய பெண்ணின் சிறிய நகையானது வில்லும் போர்செய்கின்ற வேலும் போன்ற நெற்றியும் வாள்போன்ற கண்ணும் உடைய பெண் என் வேட்கையினை நினைக்கவில்லை எனின் இனிநான் என்ன செய்வேன்?

## முயங்குதலுறுத்தல்

*தலைவி முயங்குவதற்கு உடன்பட்டமையினைக் கூறுவது*

**வானக் கதிரவன் மண்ணக மாதை மணந்ததன்றோ**
**நானக் குழலியை நானின்று பெற்றது நாவலர்க்குத்**
**தானக் களிறு தரும்புயல் வாணன் தமிழ்த்தஞ்சைசூழ்**
**கானக் கடிவரை வாய்விரை நாண்மலர்க் காவகத்தே.** 17

**தெளிவுரை:** நாவன்மை உடைய புலவர்களுக்கு மதநீர் பொழியும் யானையைக் கொடுக்கும் மழைமேகம் போன்ற தஞ்சை வாணனின் காடு சூழ்ந்த பொதிகை மலையில் மணம் வீசும் மலர்கள் மலர்ந்திருக்கும் சோலையில் திரட்சியான குழல் உடையவளை இன்று நான் கூடிய அருமையான செயல் வானில் உள்ள சூரியன் மண்ணுலகில் வந்து பெண்ணைக் கூடியது போன்றதாகும்.

## புணர்ச்சியின் மகிழ்தல்

*தலைவன் புணர்ச்சியால் பெற்ற இன்பத்தைக் கூறுவது*

**மலைநாடு கொண்ட வழுதிகண் போல்பவன் வாணனென்னொன்**
**கலைநாடு தஞ்சையர் காவலன் மால்வரைக் கன்னிபொன்வாள்**
**முலைநா முயன்று முயங்கின மால்முயன் றாலினியைந்**
**நலைநாக நன்மணி யும்பெற லாமித் தரணியிலே.** 18

**தெளிவுரை:** மனமே! சேரநாடாகிய மலை நாட்டை வெற்றியால் கவர்ந்த வழுதிக்குக் கண்போன்றவன், அறுபத்து நான்கு கலைகளும் வீற்றிருக்கும் தஞ்சை நகரில் உள்ளவர்களுக்கு மன்னனாகிய வாணனின் பெரிய மலையில் பெறுவதற்கு அரிதாகிய இக் கன்னியின் பொன் அணிந்த முலையிடத்தில் நாம் முயற்சியினால் முயங்கினோம். அதனால் இன்று இப் பூமியில் கிடைப்பதற்கு அரிதாகிய ஐந்து தலை நாகத்தின் மணியும் பெறவேண்டும் என்று சிந்தித்தலை முயற்சி செய்தால் பெறலாம்.

## புகழ்தல்

*தலைவன், தலைவியின் நலம் பாராட்டுதல்*

**திரண்மா மரகதச் செய்குன்று காளென்றுஞ் செவ்வனநீர்**
**முரண்மா தவங்கள் முயன்றுசெய் தாலு முளரிமங்கை**
**சரண்மாறை வாணன் தமிழ்த்தஞ்சை நாட்டென் தனியுயிர்க்கோர்**
**அரண்மா னனையகண் ணாள்கொங்கை போறல் அரிதுமக்கே.** 19

**தெளிவுரை:** திரட்சியான பெரிய மரகதக்கல்லால் செய்யப் பட்ட செய்குன்றுகளே! நீங்கள் சிறந்த வனத்தில் இருந்து கொண்டு

முலைக்கு நிகராக வேண்டுமென்று இரவும் பகலும் தவம் செய்கிறீர்கள். அவ்வாறு தவம் செய்தாலும் திருமகள் வீற்றிருக்கும் மாறை என்னும் வாணனின் தஞ்சை நாட்டில் துணை இல்லாத எனது உயிருக்கு அரணும் மானும் போன்ற கண்ணை உடையவளின் முலைக்கு ஒப்பாதல் உங்களுக்கு அரிதான செயலாகும்.

## 3. வன்புறை

தலைவி ஐயம் கொண்டபோது தலைவன் அந்த ஐயத்தைத் நீக்குமாறு வற்புறுத்திக் கூறுதல்.

### அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல்

புணர்ச்சிக் காலத்தில் தலைவி அணிந்த முத்துமாலை முதலிய முலை அணி, கூந்தல் அணி இவைகள் கலைந்திருப்பதைக் கண்ட தலைவன் தன்கையினால் கலைந்தவற்றைச் சரியாக அணிவித்த போது தலைவி, பாங்கி அணிவித்த இவ்வணிகள் நீங்கள் அணிவித்தபோது வேறுபாடு தோன்றும் என்றும் இவ்வேறுபாட்டைப் பாங்கி அறிந்தால் ஐயம் பிறக்கும் என்றும் நாணத்தால் முகம் வேறுபட, அதனை அறிந்து தலைவன் தலைவியைத் தெளிவுபெறச் செய்வது.

**நாவியுங் காரகி லாவியுந் தோய்குழல் நாணியஞ்சேல்**
**வாவியுஞ் சோலையுஞ் சூழ்தஞ்சை வாணன்தென் மாறைவயற்**
**காவியுஞ் சேலுங் கமலமுங் காட்டுநின் கண்மலரும்**
**ஆவியும் போலினி யாரணி யாக வணிந்தனனே.** 20

**தெளிவுரை:** மானின் அரிதாரமும் கருமை நிறமான அகில் புகையும் தோய்ந்த குழலை உடையவளே! நான் அணிந்த அணியால் அச்சமும் நாணமும் கொள்ளாதே. குளங்களும் சோலைகளும் சூழ்ந்த தஞ்சைவாணனின் தென்மாறை நாட்டு வயலில் பூத்த குவளைமலரும் மீனும் தாமரை மலரும் ஒப்புமையாக இருக்கும் உன் கண்மலரும் ஆவியும் போன்ற தோழிகள் அணிந்த அணிகள் போலவே அணிவித்தேன். அதனால் அச்சம் கொள்ளாதே.

### பெருநயப் புரைத்தல்

தலைவன் இனியும் வருவானோ வரமாட்டானோ என்று நினைத்து முகம் மாறுபட்ட தலைவியைக் கண்டு தலைவன் தன் மிகுதியான காதலைத் தலைவிக்குக் கூறுதல்.

**மன்னா உலகத்து மன்னிய சீர்த்தஞ்சை வாணன்வெற்பில்**
**என்னாவி யன்ன இவளிடை மேலிணை கொண்டெழுந்த**

பொன்னா ணணிகொங்கை போலவன் மருங்கள் பொய்கையுண்டோ
நன்னாள் அரும்பொரு தாளிரண் டீனு நளினங்களே. 21

**தெளிவுரை:** நிலையில்லாத உலகில் நிலைபெற்ற புகழை உடைய தஞ்சை வாணனின் மலையில் வசிக்கும் வண்டுகளே! என் உயிரை ஒத்த இவளுடைய இடையின்மேல் இரண்டு என்னும் எண்ணைக் கொண்டு பூணை அணிந்திருக்கும் முலைபோல எழுந்த பொன்னாண் என்னும் நீங்கள் செல்லும் நீர்நிலைகளில் ஒருதாள் இரண்டு அரும்புகளை ஈனும் தாமரைகளைக் கண்டதுண்டா?

## தெய்வத் திறம் பேசல்

இவ்வாறாக கூறியும் தலைவி தெளிவடையாத காரணத்தால் ஊழ்வினையின் வலிமையைக் கூறுவது.

**மன்னிய பார்புகழ் வாணன்தென் மாறையின் மாந்தளிர்போல்**
**மின்னிய மாமை விளர்ப்பதென் னேவிதி கூட்டநம்மில்**
**பின்னிய காதல் பிரிப்பவர் யாரினிப் பேரருவி**
**இன்னிய மாக இளமயி லாடும் இரும்பொழிற்கே.** 22

**தெளிவுரை:** உலகில் நிலைபெற்ற புகழை உடைய தஞ்சை வாணனின் தென்மாறை மலையில் வரும் பெரிய அருவி தண்ணுமை போன்று ஒலிக்க, இளமை பொருந்திய மயில் ஆடும் சோலையில் இன்று மாந்தளிர்போல் ஒளிவீசும் அழகினைக் காட்டுவது என்ன! விதி சேர்த்துவைத்த நம் வலிமையான காதலைப் பிரிப்பவர் யார்? அதனால் நீ ஐயம் கொள்ள வேண்டாம்.

## பிரியேனென்றல்

நீர் நிலையின் கரையில் இருக்கின்ற பசுமையான கொடி வெயிலின் கடுமையினால் வாடுவதுபோல, புணர்ச்சியால் பெற்ற அழகு தலைவன் பிரிவான் என்னும் நினைவினால் உடல் வேறுபட்டமை கண்டு தலைவன் உன்னைப் பிரியமாட்டேன் என்று கூறுவது.

**வண்கொடி யேய்மதில் மாறை வரோதயன் வாணனொன்னார்**
**எண்கொடி யேனெய்த இவ்வண்ண நீயிரங் கேலிரங்கேல்**
**யுண்கொடி யேரிடை வண்டிமிர் பூங்குழல் நூபுரத்தாள்**
**பெண்கொடி யேபிரி யேன்தரி யேனிற் பிரியினுமே.** 23

**தெளிவுரை:** கொடுக்கின்ற கொடையினால் கட்டிய கொடிகள் நிறைந்திருக்கின்ற மதில்கள் சூழ்ந்திருக்கும் மாறை நாட்டில் வரத்தினால் பிறந்த தஞ்சை வாணனுக்குப் பகைவராக

உள்ளவர்கள் அடையும் எண்ணத்தைக் கொடியவனாகிய நான் அடைய நினைத்தால் நீ வண்ணம் மாறுபட்டு வருந்தாதே. நுட்பமான இடையினையும் வண்டுகள் ரீங்காரமிடும் கூந்தலையும் கால் சிலம்பு அணிந்த பாதங்களையும் உடைய பெண்கொடியே! உன்னை விட்டுப் பிரிய மாட்டேன். பிரிந்தாலும் கணப்பொழுதும் தாங்கமாட்டேன்.

### பிரிந்து வருகென்றல்

*பிரிந்து வருவேன் என்று கூறுதல்.*

**சென்றே பகைவென்ற திண்படை வாணன் செழுந்தஞ்சைசூழ்**
**நன்றே தருவையை நாடனை யாய்நம தாருயிர்போல்**
**ஒன்றே யெனதுரை யூங்குயர் சோலையி னூடொளித்து**
**நின்றே வருவலிங் கேவிளை யாடுக நீசிறிதே.** 24

**தெளிவுரை:** படை எடுத்துச் சென்று பகையை வெற்றி கொண்ட வலிமையான படையினை உடைய வாணனின் வளமான தஞ்சையைச் சூழ்ந்துவந்து நன்றாகத் தரப்பட்ட வையை நாடு போன்றவளே! நான் ஒரு சொல் சொல்லுகிறேன். அதனைக் கேட்பாயாக. நம் இருவருக்கும் அரிதான உயிர் ஒன்றாக இருப்பது போல என் சொல்லும் ஒன்றேயாகும். என்னவென்றால் நான் இங்கிருக்கும் சோலைக்குள் ஒளிந்து நின்று வருவேன். நீ சிறிது நேரம் விளையாடுவாயாக.

### இடம் அணித்து என்றல்

தலைவனின் ஊர் தொலைவாக உள்ளதோ, அருகில் உள்ளதோ என்ற கவலை கொண்ட தலைவியின் மனநிலையைக் குறிப்பால் உணர்ந்த தலைவன் என் ஊர் அருகில் உள்ளது என்று கூறுதல்.

**மணிபொன் சொரியுங்கை வாணன்தென் மாறை மருவினர்போல்**
**தணிபொன் சொரியுந் தடமுலை யாயுயர் சந்தமுந்தி**
**அணிபொன் சொரியு மருவியெஞ் சார லகத்தலர்தேங்**
**கணிபொன் சொரியுநின் சாரல்மென் காந்தளங் கையகத்தே.** 25

**தெளிவுரை:** தகுதி உடையவர்களுக்குப் பொன்னும் மணியும் கொடுக்கும் கையினை உடைய தஞ்சை வாணனின் தென்மாறை நாட்டில் வாழ்பவர்களைப்போலச் சிறிது தளர்ந்து பொன் போன்ற பசலை படர்ந்த பெரிய முலையினை உடையவளே! நீ இவ்வாறு வருத்தம் கொள்ள வேண்டாம். உன்னுடைய ஊருக்கு என் ஊர் தொலைவானதல்ல. அருகில்தான் இருக்கிறது. எவ்வாறெனில் உயர்ந்த சந்தன மரங்களை அலைகளால் எறிந்து

பொன்னை இறைக்கும் அருவி அமைந்திருக்கின்ற என் மலைச் சாரலில் உள்ள தேனுடன் கூடிய வேங்கைமரம் உன் சாரல் இடத்திருக்கும் மென்மையான காந்தள் மலராகிய கையில் பொன்போல் அலரைச் சொரியும். (இதனால் தலைவன் ஊரும் தலைவியின் ஊரும் அருகருகே உள்ளமை விளங்கும்.)

## 4. தெளிவு

தலைவன் கூறிய சொற்களால் தலைவி மெய் என்று தெளிதல்.

**எத்துந் தமதுரை தேறிநின் றேனையிங் கேதனியே**
**வைத்தங் ககன்று மறந்துறை யார்வறி யோர்கவர**
**முத்துந் துகிரு மிரங்குந் தரங்க முகந்தெறிந்து**
**தத்துங் கரைவையை சூழ்தஞ்சை வாணன் தமிழ்வெற்பரே.** 26

**தெளிவுரை:** வறுமையில் வாடுபவர்கள் பெற்றுக் கொள்ளும் பொருட்டு முத்தையும் பவளத்தையும் ஒலியெழுப்பும் திரைக் கையினால் அள்ளி வீசும் கரை பொருந்திய வையை சூழ்ந்த தமிழ் மலை நாட்டவர் எந்நிலையிலும் நான் வருத்தம் கொள்ளுமாறு பிரிந்து இருக்க மாட்டார்.

## 5. பிரிவுழி மகிழ்ச்சி

தலைவி, பிரிந்து சென்றபோது அவள் செல்வதைக் கண்டு தலைவன் மகிழ்தல்.

### செல்லுங்கிழத்தி செலவுகண் டுளத்தொடு சொல்லல்

தலைவன், புணர்ச்சிக் களத்தில் இருந்து பெயர்ந்து சென்ற தலைவியைக் கண்டு தன் மனத்துக்குக் கூறுதல்.

**அகிலேந்து கூந்த லொருகையி லேந்தி யசைந்தொருகை**
**துகிலேந்தி யேந்துந் துணைச்சிலம் பார்ப்பத் துளிகலந்த**
**முகிலேந்தி பூம்பொழில் சூழ்தஞ்சை வாணன்முந் நீர்த்துறைவாய்**
**நகிலேந்து பூங்கொடி போற்செல்லு மானெஞ்ச நம்முயிரே.** 27

**தெளிவுரை:** மனமே! நம் உயிரின் வடிவம் கொண்டு அகில்புகை ஊட்டப்பட்ட கூந்தலை ஒருகையில் ஏந்திக் கொண்டு ஒருகையில் உடையினை ஏந்திக்கொண்டு மென்மையாய் அசைந்து காலில் அணிந்த சிலம்பு ஆரவாரம் செய்ய, மழைத் துளிகளைத் தாங்கிய மேகம் சூழ்ந்திருக்கும் சோலைகள் நிறைந்த தஞ்சை வாணனின் கடற்கரையில் முலையை ஏந்திய பூங்கொடி நடந்து செல்வதுபோல் செல்வதை நீ காண்பாயாக.

### பாகனொடு சொல்லல்

தலைவன், தன்னைத் தேடிவந்த பாங்கனிடம் தலைவி செல்வதைக் காட்டிக் கூறுதல்

**தென்பால் திலகமன் னான்றஞ்சை வாணன்தென் மாறைமுந்நீர்**
**வண்பால் திரண்முத்த வண்டலின் மேல்வரும் ஏதமஞ்சி**
**முன்பார்த்தென் நெஞ்சம் வரும்வழி பார்த்து முறைமுறையே**
**பின்பார்த் தொதுங்குதல் காண்வலவா வொரு பெண்ணணங்கே. 28**

**தெளிவுரை**: தேர்ப்பாகனே! ஒரு பெண் அணங்கு தென் திசைக்குத் திலகம் போன்றவனாகிய தஞ்சைவாணனின் தென்மாறை நாட்டுக் கடற்கரையில் பால் திரள் போன்ற முத்தினால் வண்டலம்பாவை செய்து விளையாடும் தோழிகள் பார்க்கும் குற்றத்திற்கு அச்சம் கொண்டு முன்னே பார்த்து, மனம் வருகின்ற வழியை முறையே இரண்டு பக்கமும் பார்த்து நான் வருகிறேனோ என்று பின்னால் பார்த்து நடந்து செல்வதைக் காண்பாயாக.

## 6. பிரிவுழிக் கலங்கல்

தலைவி பிரிந்தபோது தலைவன் மனம் கலங்கிக் கூறுதல்

### ஆயவெள்ளம் வழிபடக் கண்டு இதுமாயமோ என்றல்

தலைவியைத் தோழியர் கூட்டம் வந்து வழிபடக் கண்டு தோழிகள் கூட்டத்துடன் உள்ள ஒருத்தி என்னைத் தனித்துக் கூடியது என்ன மாயமோ? என்று மயங்கிக் கூறியது.

**சீயங்கொ லோவெனத் தெவ்வென்ற வாணன்தென் மாறைவையைத்**
**தோயங்கொ லோவெனு நேயதம் பால்வைத்துச் சோலைமஞ்ஞை**
**ஆயங்கொ லோவெனு மாயத்துள் ளாளிவ் வரிவையென்னை**
**மாயங்கொ லோநெஞ்ச மேமணம் போலிங்கு வந்துற்றதே. 29**

**தெளிவுரை**: மனமே! பகைவர் போர்க்களத்தில் போர் புரியும்போது இவன் சிங்கமோ என்று சொல்லுமாறு வெற்றி பெற்ற தஞ்சைவாணனின் தென்மாறை நாட்டில் வரும் வைகையாற்றினது நீரோ என்று சொல்லப்பட்ட அன்பை நம்மிடத்தில் வைத்து, சோலையில் உலாவும் மயில் கூட்டமோ என ஐயம் கொள்ளவைக்கும் இத்தோழியர் கூட்டம் வழிபட நடுவில் வீற்றிருக்கும் இவ்வரிவை மணம் செய்ததுபோல இங்கு வந்து என்னுடன் கூடியது என்ன மாயமோ?

## வாயில் பெற்றுய்தல்

தலைவி தோழியர் கூட்டத்தில் செல்லும்போது உயிர்ப் பாங்கி முகத்தை நோக்கிச் செல்ல அறிந்து அவ்வுயிர்ப் பாங்கியைத் தலைவன் தூதாகப் பெற்று உய்வதாகக் கூறுதல். இதனைத் தூது என்றும் குறிப்பிடலாம். தலைவியை விட்டுப் பிரியாமல் இருக்கும் காரணத்தினால் பாங்கி எனப்பட்டாள். இடந்தலைப்பாடும் பாங்கற் கூட்டமும் கூறி மதியுடம்பாட்டில் அறியும் பாங்கியை இங்கு அறிந்ததாகக் கூறவேண்டிய காரணம் என்னவெனில் மதியுடம்பாட்டில் வாயில் பெற்று இரவு வலியுறுத்திக் கண்ணியும் தழையும் ஏந்திச் சென்று ஊர் பெயர் முதலியவற்றை வினவிப் பாங்கியை அறிவதற்கு எனக் கொண்டு இங்கு அறியாவிட்டால் இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டத்தில் அறிவதற்கான வாய்ப்பு இல்லை. அதனால் இவ்வாயில் பெற்றுய்வதற்கும் அவ்வாயில் பெற்று இரவு வலியுறுத்துவதற்கும் மாட்டேற்றுப்பூட்டு என்று உணர வேண்டும்.

**பெருமால் மருந்தொன்று பெற்றனம் யாநெஞ்சம் பேதுறல்பார்**
**மருமான் வரோதயன் வாணன்தென் மாறை மணங்கமழ்பூந்**
**திருமான் முகமலர்ச் சேயரி பாய்கயல் சென்றுசென்றவ்**
**வொருமா னகைமுக மாமல ரோடை யுலாவருமே.** 30

**தெளிவுரை:** மனமே! பூமியின் புதல்வனாகத் தோன்றிய தஞ்சைவாணனின் தென்மாறை நாட்டில் மணம் வீசும் தாமரை மலரில் குடியிருக்கும் திருமகள் போன்ற தலைவியின் முகமலரில் உள்ள செம்மையான கோடுகள் நிறைந்திருக்கும் கயல் போன்ற கண்கள் சென்று சென்று பாங்கியின் ஒளிமிக்க முகமாகிய மலர் ஓடையுள் உலாவிக் கொண்டு வருவதனால் நமது பெரிய ஆசை நோய்க்கு மருந்து இது என்று அறியப் பெற்றோம். இம் மருந்தினால் அந்த நோய் தீரும். மயக்கம் கொள்ள வேண்டாம்.

## பண்பு பாராட்டல்

தலைவியின் அழகினைப் பாராட்டுதல்.

**மயலார் களிற்றண்ணல் வாணன்தென் மாறையில் வாய்த்தவர்கண்**
**கயலா மெனிற்கயல் கள்ளங்கொள் ளாகருந் தாழளகம்**
**புயலா மெனிற்புயல் போதுகொள் ளாதிப் புனையிழையார்**
**இயலாம் அனைத்தையும் வேறென்ன பேரிட் டியம்புவதே.** 31

**தெளிவுரை:** மனமே! நிறைந்த புகழை உடைய தஞ்சைவாணனின் தென்மாறை நாட்டில் நம் நல்வினைப் பயனால் கிடைத்த தலைவியின் கண்கள், கண்கள் அல்ல. அவை கயல்

மீன்கள் என்று கூறினால் அக்கயல் மீன்கள் கள்ளப்பார்வை பார்ப்பது கிடையாது. கருமையாகத் தாழ்ந்திருக்கும் குழலை மேகம் என்று கூறினால் மேகம் அலங்காரமாகப் பூக்களைச் சூடிக்கொள்வது கிடையாது. எனவே, இரண்டு உறுப்புகளுக்கும் அழகிற்காகத் தான் மீனையும் மேகத்தையும் உவமைப்படுத்த முடியும். இவளின் அனைத்து உறுப்புகளுக்கும் எவ்வாறு உவமை கூறுவது? அவ்வவற்றுக்கு அவைஅவையே உவமையாகும்.

### பயந்தோர்ப் பழிச்சல்

தலைவியைப் பெற்றவர்களைத் தலைவன் வாழ்த்துதல்

**அணியுஞ் சுடர்விரி சங்குபங் கேருக மாடகமும்**
**மணியுந் தரமன்னி வாழிய ரோதஞ்சை வாணன்வெற்பில்**
**தணியுந் தொழிலொழித் தின்பமுந் துன்பமுந் தன்பதமே**
**பணியும் பணியெனக் குப்பயந் தாளைப் பயந்தவரே.** 32

**தெளிவுரை:** மனமே! ஒளிவீசும் சங்க நிதி, பதும நிதி, அணிகள், செம்பொன், ஒன்பதுவகை இரத்தினங்கள் முதலானவை கொடுக்கக் கொடுக்கக் குறையாது நிலைபெற்று விளங்கும். தஞ்சை வாணனின் மலையில் மற்றதொழில்கள் எல்லாம் இன்பமும் துன்பமும் தருபவை. ஆதலால் அவற்றைக் கீழ்மையான தொழில் என்று கைவிட்டு எப்போதும் இன்பம் தரும் தன் பாதம் பணியும் தொழிலை எனக்குக் கொடுத்தவளைப் பெற்ற தாயும் தந்தையும் பல்லாண்டு காலம் வாழ்க.

### கண்படை பெறாது கங்குனோதல்

அன்றைய நாள் இரவுப்பொழுதில், தலைவி தந்த வேட்கையினால் துயில் கொள்ளாமல் இரவுக் காலத்தில் மனம் நொந்து கூறுதல்.

**வாமக் கலையல்குல் வாணுத லார்தஞ்சை வாணன்வெற்பில்**
**நாமக் கலவி நலங்கவர் போது நமக்களித்த**
**காமக் கனலவர் கையகல் காலைக் கடும்பனிகூர்**
**யாமக் கடலகத் துந்தணி யாதினி யென்செய்துமே.** 33

**தெளிவுரை:** மனமே! தஞ்சைவாணனின் பொதிகை மலையில் நாம் முன்பு இயற்கைப் புணர்ச்சியில் இன்பம் கொள்ளும்போது அழகு பொருந்திய மேகலை அணி அணியப்பட்ட அல்குலையும், ஒளி பொருந்திய நெற்றியினையும் உடைய தலைவி கொடுத்த வேட்கை மனத்துள் கனலாக அடங்கியிருந்து அவள் பிரிந்த இந்நாளில் கடுமையான பனியில் இரவாகிய கடலில் மூழ்கியும் சற்றும் தணியாமல் வாட்டுகின்றனது. இதற்கு என்ன செய்வது? -

காட்சி முதலாகக் கொண்டு கண்படை பெறாது கங்குலோதல் இறுதியாகக் கூறிய முப்பத்து மூன்று துறைகளும் முதல் நாள் நிகழ்ந்த ஒழுக்கங்களாகும்.

## 7. இடந்தலைப்பாடு

இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைப் புணர்ந்து இன்பம் பெற்ற தலைவன் மற்றொரு நாள் அவ்விடம் வந்து தலைவியைக் கூடுதலாகும்.

### தந்ததெய்வந் தருமெனச் சேறல்

முன்பு இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைத் தனக்குத் தந்த விதி, இன்றும் அவ்விடத்தில் சென்றால் அவளைத் தரும் எனச் செல்லுதல்.

**மன்றும் பொதியிலு மாமயில் சேர்தஞ்சை வாணன்வெற்பில்**
**துன்றும் புயலிளந் சோலையின் வாய்ச்சுற வுக்குழையைச்**
**சென்றுந்து சேல்விழி மின்னைமுன் நாள்தந்த தெய்வநமக்**
**கின்றுந் தருநெஞ்ச மேயெழு வாழியிங் கென்னுடனே. 34**

**தெளிவுரை:** மனமே! உணர்ப்பொது இடமான மரத்தடியிலும் எல்லோரும் கூடியிருக்கும் அம்பலத்திலும் அழகான மயில் நிற்கும் தஞ்சைவாணனின் மலையில் மேகம் தங்கியிருக்கும் இளமையான சோலையில் மகரக்குழையைத் தள்ளும் கெண்டை போன்ற விழியினை உடைய மின்னல் போன்ற தலைவியை முதல் நாள் தந்த விதியானது நமக்கு இன்றும் சென்றால் தரும் ஆதலால் என்னுடன் நீ ஒத்துழைத்து என்னோடு வருவாயாக.

### முந்துறக் காண்டல்

முன்நாள் போலக் காணுதல்

**மருவாய நாப்பண் மயிலுரு வாய்நென்னல் வாணன்தஞ்சை**
**தருவாய்த் தழைகொய்து தண்புனங் காத்துத் தடங்குடைந்து**
**திருவாய் மலர்ந்து சிலம்பெதிர் கூயின்றொர் தெய்வதப்பெண்**
**உருவா யொருதனி யேநின்ற தாலென் னுயிர்க்குயிரே. 35**

**தெளிவுரை:** மனமே! நேற்று தோழியர் கூட்டத்தின் நடுவே மயிலின் வடிவமாக இருந்து, இன்றைய பொழுதில் தஞ்சை வாணனின் தஞ்சைச் சோலையில் தழைபறித்து, மழை பெய்த காரணத்தால் குளிர்ந்த தினைப் புனத்தைக் காத்து, குளத்தில் குடைந்து நீராடி, மேன்மை மிக்க வாய் திறந்து மலையில் ஒலி எழுமாறு அழைத்து, ஒப்புமை கூற இயலாத பெண்ணின் வடிவமாய் ஒப்புமை கூறஇயலாத என் உயிருக்கு உயிரான தலைவி நிற்கிறாள். காண்பாயாக.

### மயங்கல்

புணர்தல் எனப் பொருள்படும்.

**மானா கரந்தஞ்சை வாணன் வரோதயன் மாறையன்னாள்**
**தானாவி நின்றவர் தாமரையின் மேஅந் நடாமலர்வாய்**
**ஆனா தொழுகுசெந் தேனல்கி மேவு மரசவன்னம்**
**யானா கிடைப்பது வேயின்ன பான்மை யிருவர்க்குமே. 36**

**தெளிவுரை:** மானத்தின் இருப்பிடமாய் உள்ள குலத்தில் வரத்தினால் பிறந்த தஞ்சைவாணனின் மாறைநாடு போன்ற தலைவி, குளத்தில் மலர்ந்த தாமரை போன்றவளாவாள். குளத்தில் உள்ள தாமரை மலரில் நீங்காமல் இருக்கும் தேனுடைய உள்இதழில் தேன் அருந்தும் அரச அன்னப்பறவை நானானேன் ஆ! இத்தகைய நிலை எவருக்குக் கிடைக்கத்தக்கது!

### புகழ்தல்

தலைவன், தலைவியைப் புகழ்ந்துரைத்தல்.

**அரும்பாம் அளவில் தனத்தொடொவ் வாயல ராமளவில்**
**கரும்பா மொழிவதனத் தொடொவ் வாய்களியானை செம்பொன்**
**தரும்பாரி வாணன் தமிழ்த்தஞ்சை யான்தரி யாரின்முன்செய்**
**பெரும்பாவ மல்லது நீர்நின்ற பேறல்வி பெற்றிலையே. 37**

**தெளிவுரை:** அக இதழ்களை உடைய தாமரை மலரே! நீ அரும்பாக இருக்கின்ற காலத்தில் கரும்பினை ஒத்த இனிய சொல்லை உடைய தலைவியின் முலைக்கு ஒப்பாகமாட்டாய். மலராகும் காலத்தில் முகத்துக்கு ஒப்பாகமாட்டாய். யானையினையும் செம்மை நிறமான பொன்னையும் பாவலர்களுக்கு வழங்கும் பாரி வள்ளலுக்கு ஒப்பான தமிழ்த் தஞ்சை நகரை உடைய வாணனுக்குப் பகைவர்கள்போல முன்பு செய்த பெரும் பாவமல்லாமல் நீரில் தவப்பேறு பெற்றிலை ஆயினாய்.

### ஆயத்துய்த்தல்

தோழியர்களின் கூட்டத்தில் தலைவியைச் செல்ல வைத்தல்.

**மேவிக் கலைக்கட லென்புலன் மீனுண்டு மீண்டுவந்தென்**
**ஆவிக் கமலத் தமரன்ன மேநின் அயில்விழிபோல்**
**வாவிக் கயலுக ளுந்தஞ்சை வாணன் வரையினுடன்**
**கூவிக் கயங்குடை நின்குயி லாயங் குறுகவே. 38**

**தெளிவுரை:** கலைக்கடலில் விழுந்து என் அறிவாகிய மீனை உண்டு மீண்டும் வந்து என் உயிராகிய தாமரையில் வீற்றிருக்கும் அன்னமே! உன்னுடைய கூர்மையான கண்போலக் குளத்தில்

[illegible]

## ௬. பாங்கற் கூட்டம்

[illegible]

### தலைவன் பாங்கனைச் சார்தல்

தலைவன், [illegible] பாங்கனைச் சார்தல்.

[illegible] 39

தெளிவுரை: [illegible]

### பாங்கன் தலைவனை உற்றது வினாதல்

தலைவனின் மனமும் தோள்களும் வாடிய தன்மையைக் கண்டு பாங்கன் இம்மாற்றத்திற்குக் காரணம் என்னவென்று கேட்டறிதல்.

வலம்புரி யீன்றகொண் டைவாணன் தென்மாறை மழைவளர்பூஞ்
சிலம்புறை சூர்வந்து தீண்டின போலொளி தேம்பிவில்லா
நலம்புனை தோளுநின் உள்ளமும் வாடி யுருகிநின்று
புலம்புவ தென்னைகொல் லோசொல்ல வேண்டும் புரவலனே. 40

தெளிவுரை: தலைவனே! சங்கநிதிபோல் கொடுக்கும் பண்பைக்கொண்ட தஞ்சைவாணனின் தென்மாறை நாட்டில் உள்ள மேகங்கள் துயில்கொள்ளும் அழகுடைய மலையில் வாழும் சூர் என்னும் தெய்வப்பெண் தீண்டியதுபோல உன் உடல் ஒளி இன்றி திரட்சியான கல்போன்ற உன் தோளும் மனமும் இவ்வாறு உருகிப் புலம்புமாறான நிலையை அடையக் காரணம் என்ன?

## தலைவன் உற்றதுரைத்தல்

தலைவன் தான் அடைந்த உடல் வேறுபாட்டிற்கான காரணத்தைக் கூறுதல்

**மலைமுழு துங்கோற்றம் வைக்கின்ற வாணன்தென் மாறைநண்ப**
**சிலைமுழு துஞ்சுற்று முற்றுமெய் யாநிற்பச் செந்திறத்தே**
**கொலைமுழு துங்கற்ற கூரிய வாளி குளிப்ப இன்றென்**
**கலைமுழு தும்பட்ட தாலொரு மான்முடிக் கண்ணியிலே.** 41

**தெளிவுரை:** எட்டுத் திசைகளிலும் உள்ள மலைகள் முழுவதிலும் வெற்றிக் கொடியை நாட்டுகின்ற தஞ்சைவாணனின் தென்மாறை நாட்டில் இருக்கின்ற பாகனே! புருவமாகிய வில் திசைகளில் எல்லாம் அம்பினை எய்ய, கொலைத் தொழிலை முழுவதுமாகக் கற்ற கூர்மையான அம்புகள் எனது செம்மைத் தன்மை உடைய நெஞ்சில் தைக்க, அப்போது என் மனத்தில் இருந்த கலை அறிவு முழுவதும் ஒரு பெண் வைத்த தலை மாலையில் பட்டது.

## கற்றறிபாங்கன் கூறல்

வேதம், ஆகமம் ஆகியவற்றைக் கற்றறிந்த பார்ப்பனப் பாங்கன் தலைவனுக்கு இடித்துரை கூறுதல்.

**தருகற் பகமன்ன சந்திர வாணன் தடஞ்சிலம்பில்**
**முருகக் கடவு ளனையவெற் பாமுகி லும்பிறையுஞ்**
**செருகக் கிளர்வரை வந்தவோர் பேதைக்குன் சிந்தையெல்லாம்**
**உருகக் கலங்கினை நீதகு மோமற் றுனக்கிதுவே.** 42

**தெளிவுரை:** இரவலர்கள் யார் வந்து கேட்டாலும் கேட்ட பொருள்கள் எல்லாவற்றையும் கொடுக்கும் கற்பக மரத்தை ஒத்த சந்திரருக்கு மகனாகிய வாணனின் பெரிய மலையில் இருக்கும் முருகக் கடவுளை ஒத்திருக்கும் மலை நாட்டுத் தலைவனே! நீ மேகமும் பிறையும் சூடிக்கொள்வதுபோல் உயர்ந்திருக்கும் மலையில் வந்த ஒரு பெண்ணுக்கு உன் மனம் உருகிக் கலக்கம் கொள்வது உனக்குப் பொருத்தம் உடையதாகாது.

## கிழவோன் கழற்றெதிர்மறுத்தல்

பாங்கன் கூறியவற்றைத் தலைவன் மறுத்துக் கூறுதல்.

**மாலாய் மதம்பொழி வாரண வாணன்தென் மாறையன்னார்**
**சேலார் கருங்கண்ணுஞ் செங்கனி வாயுஞ் சிறியநுண்ணேர்**
**நூலார் மருங்குலும் பெருந்தன பாரமு நும்மையன்றி** 43
**மேலா னவருங்கண் டாலுரை யாரிந்த வீரங்களே.**

**தெளிவுரை:** மயக்கமாய் மதநீரைப் பொழியும் யானையை உடைய தஞ்சைவாணனின் தென்மாறை நாடு போன்ற அழகுடையவளின் மீன்போன்ற கருங் கண்ணும், செம்மை நிறமான கனி போன்ற வாயும் சிறிய நுட்பமான நூல் போன்ற இடையும், பெரிய முலைகளும், கண்டவர்களின் மனத்தை உருக்கும் தன்மையினை எளிமையாகக் கூறினீர்கள். உம்மையன்றி வேறு எவரும் கண்டால் இத்தகைய வீர உரையைக் கூறமாட்டார்கள்.

## கிழவோற்பழித்தல்

*தலைவனைப் பாங்கன் பழித்துக் கூறுதல்*

**சூரார் சிலம்பிற் சிலம்பிமென் னூல்கொண்டு சுற்றவெற்றிப்**
**போரார் களிறு புலம்பிநைந் தாங்கொரு பூவைகொங்கை**
**வாரா லணைப்ப வருந்தினை நீதஞ்சை வாணன்வெற்பா**
**ஓராழி சூழுல கத்தெவ ரேநின்னை யொப்பவரே.** 44

**தெளிவுரை:** தஞ்சை வாணனின் மலையில் இருப்பவனே! தெய்வப் பெண் பொருந்தியிருக்கும் மலையில் சிலந்தி மென்மையான நூலைக் கொண்டு சுற்ற, எதிரிகளின் படையில் வெற்றிப்போர் செய்கின்ற யானையானது புலம்பி நொந்ததுபோல ஒரு பெண்ணின் வார்பொருந்திய முலையினால் அணைக்க நீ வருத்தம் கொண்டாய். அதனால் ஒப்புமை கூற இயலாத கடல் சூழ்ந்த உலகத்தில் உன்னை ஒப்புமையாகக் கூறத்தக்கவர் யார்? (வீரத்தில் சிறந்தவனே! ஒரு பெண்ணால் உள்ளம் கலங்கி இருக்கிறாயே! என்று புகழ்வது போலப் பழித்தல்)

## கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்

*தலைவன், நீ பழிக்கின்ற என் உள்ளம் தேறுவதற்கு வேட்கை தாங்க முடியாததாக இருப்பதைக் கூறுதல்*

**பொறைகொண்ட தாமரைப் போதன்ன கொங்கையும் பொங்கரிசேர்**
**கறைகொண்ட வாளன்ன கண்களுங் கொண்டொரு கன்னிதெவ்வைத்**
**திறைகொண்ட வாணன் செழுந்தஞ்சை சூழுஞ் சிலம்பிலின்றென்**
**நிறைகொண்ட வாறறி யாதிக ழாநிற்றி நீயுநின்றே.** 45

**தெளிவுரை:** பாரம் மிக்க தாமரை மொட்டுப் போன்ற முலையும், செவ்வரி படர்ந்ததும் பகைவர்களுடன் சண்டையிட்டு அவர்களின் உடலைக் குத்திக் கறை கொண்டிருக்கும் வாளினை ஒத்திருக்கும் கண்களும் உடைய பெண்ணானவள் பகைவர்களிடம் திறைப் பொருள்களைப் பெறும் தஞ்சை வாணனின் வளமான மலையில் இன்று என்னுடைய கற்பு அவள்பால் சென்றதை அறியாமல் நீயும் என் முன் நின்று இகழ்ந்தால் நான் என்ன செய்வேன்?

### பாங்கன் தன்மனத் தழுங்கல்

தலைவன் கூறியதைக் கேட்ட பாங்கன் என் தலைவனே! நீ இவ்வாறு கூறினால் நான் அதற்கு என்ன செய்வேன் என்று தன் மனத்துள் இரங்கியது.

**சீதள வாரங் கமழ்தஞ்சை வாணன்தென் மாறையன்னாள்**
**காதள வாவெங் கடுவள வாவொளிர் காவியந்தன்**
**போதள வாவிழி யென்னுமென் னாசைப் புறத்தளவா**
**சூதள வாமுலை யென்னுமென் நாம்இனிச் சொல்லுவதே. 46**

**தெளிவுரை:** குளிர்ச்சி பொருந்திய சந்தனம் மணம் வீசும் தஞ்சை வாணனின் தென்மாறை நாடு போன்று அழகான இவளின் கண்களைக் காதினாலும் அளந்தறிய இயலாது. கொடுமையான விடத்தினாலும் அளந்தறிய முடியாது. அழகான குவளை மலராலும் அளந்தறிய முடியாது. அவளது முலைபோல் வளர்ந்த எம் ஆசையினாலும் அளந்தறியப்பட மாட்டாது. சூதினாலும் அறிய முடியாது. அதனால் மனமே! நாம் இன்று என்ன சொல்ல இயலும்?

### பாங்கன் தலைவனோடு அழுங்கல்

**என்மே லறைவது யானிங்கு நின்செவிக் கென்சொலெல்லாம்**
**வன்மே லடர்கொங்கை காரண மாய்த்தஞ்சை வாணன்வெற்பா**
**கன்மே லறைகின்ற மென்முளை போலுங் கடல்வெதும்பில்**
**தன்மேல் விளாவவுண் டோதரை மேலொரு தண்புனலே. 47**

**தெளிவுரை:** தஞ்சைவாணனின் மலைநாட்டுத் தலைவனே! பேரின்ப வாழ்வுக்கு உரிய நீ சிற்றின்பத்திற்கு உரியவன் ஆதல் தகுதி உடையதாகாது என்று, சூதின்மேல் பகை கொள்ளும் முலையினை உடைய பெண்ணின் காரணமாக இங்கு உனக்கு நான் கூறிய சொற்கள் எல்லாம் உன் காதுகளுக்குக் கல்லின்மேல் அடிக்கின்ற மென்மையான மூங்கிலின் முளைபோல் ஆயின. இனி நான் சொல்ல என்ன இருக்கிறது? கடல் வெப்பமடைந்தால் அவ் வெப்பம் நீங்க நீர் தர உலகில் தண்ணீர் இருக்கிறதோ?

## எவ்விடத் தெவ்வியற்றென்றல்

'என் தலைவன் இவ்வாறு கூறியும் காதல் துன்பம் குறையாதவன் ஆகினான். அதனால், இவன் தலைவியைக் கூடி இன்புறவில்லை எனில் உயிர் வாழமாட்டான், என்றறிந்து பாங்கன் தலைவனை நோக்கி' உன்னால் காணப்பட்ட பெண்ணின் உருவம் எந்த இடத்தில் எத்தன்மை உடையதாக இருந்தது என வினாவுதல்

**முகத்திற் பகழி யிரண்டுடை யார்க்கிட மூரிமுந்நீர்**
**அகத்திற் பிறந்த அரவிந்த மோவடை யார்தமக்கு**
**மகத்திற் சனியன்ன சந்திர வாணன்தென் மாறைவெற்போ**
**நுகத்திற் பகலனை யாய்தன்மை யேது நுவலெனக்கே.** 48

**தெளிவுரை:** உன்னால் காணப்பட்ட முகத்தில் அம்பு போன்ற இரண்டு கண்களை உடையவளின் இருப்பிடம் பெருமை மிக்க கடலில் பிறந்த தாமரை மலரோ? பகைவர்களுக்கு மக நட்சத்திர நாளில் வந்த சனியினைப் போன்ற சந்திர வாணனின் தென் மாறை நாட்டு மலையோ? உழுகின்ற ஏரின் நடுவில் பிணிக்கப்பட்ட நுகத்தாணி போன்று நடுநிலை உடைய தலைவனே! அப் பெண்ணின் இலக்கணம் என்ன? அதனை நீ எனக்குச் சொல்லியருள வேண்டும்.

## அவணஃ திவ்விடத் திவ்வியற்றென்றல்

தலைவன் என்னால் காணப்பட்ட பெண்ணின் உருவம் இவ்விடத்தில் இவ்வாறு இருந்தது என்று பாங்கனுக்குக் கூறியது.

**கனமே குழல்செங் கயலே விழிமொழி கார்க்குயிலே**
**தனமே முகையென் தனிநெஞ்ச மேயிடை தன்பகைக்கு**
**வனமே யருளிய வாணன்றென் மாறை மணிவரைசூழ்**
**புனமே இடமிங்ங னேயென்னை வாட்டிய பூங்கொடிக்கே.** 49

**தெளிவுரை:** என்னைத் துன்பம் கொள்ளச் செய்த பூங்கொடி போன்றவளாகிய பெண்ணின் இருப்பிடம், தன் பகைவர்களுக்குக் காட்டை வாழ்வதற்கு இடமாகக் கொடுத்த தஞ்சைவாணனின் தென்மாறை நாட்டு முத்தினை ஈன்றெடுக்கும் மூங்கில் மரங்கள் சூழ்ந்திருக்கும் தினைப்புனமாகும். அவளின் கூந்தல் மேகம். கண்கள் செவ்வரி படர்ந்த மீன்களாகும். சொல் குயிலின் இசை போன்றது. முலை மொட்டாகும். இடை தனிமைப்பட்ட என் மனம் போன்றதாகும்.

## பாங்கன் இறைவனைத் தேற்றல்

பாங்கன் தலைவனிடம் இவ்வாறு நீ வருத்தம் கொள்ளாதே. நீ சொன்ன இடத்திற்குச் சென்று நான் தலைவியைக் கண்டு வருகிறேன் என்று தேற்றுதல்.

**மழைவளர் மாளிகை மாறை வரோதயன் வாணன்வெற்பின்**
**இழைவளர் வார்முலை யேரிளந் தோகையை யிக்கணம்போய்க்**
**கழைவளர் சாரலிற் கண்டுனை யான்வந்து காண்பளவும்**
**தழைவளர் தாரண்ண லேதணி வாய்நின் தகவின்மையே.** 50

**தெளிவுரை:** மலரோடு தழையைக் கலந்து கட்டப்பட்ட நீண்ட மாலையைச் சூடியிருக்கும் தலைவனே! மேகங்கள் துயில்

கொள்ளும் மாளிகைகள் நெருங்கிய தென்மாறை நாட்டு வரோதயனாகிய தஞ்சைவாணனின் மலையில் அணியிலும் கச்சம் அணியப்பட்ட முலையினை உடைய இளந்தோகை போன்ற தலைவியை நீ கூறிய மூங்கில் வேலியை உடைய வார்ந்த தினைப் புனத்தில் இப்போதே போய்க் கண்டு மீண்டும் அங்கிருந்து வந்து உன்னைக் காண்கின்ற வரை உன் வருத்தத்தை விடுவாயாக.

## குறிவயிற்சேறல்

தலைவன் கூறிய குறி இடத்தை அறிந்து அவ்விடத்திற்குப் பாங்கன் செல்லல்.

**பாரித்த திண்மையெம் மண்ணலுண் ணீரைப் பருகிநின்று**
**பூரித்த செவ்விள நீர்களுந் தாங்கியப் பூங்கொடிதான்**
**வாரித்த லம்புகழ் வாணன்தென் மாறை வரைப்புனஞ்சூழ்**
**வேரித்த டம்பொழில் வாய்விளை யாடுங்கொல் மேவிநின்றே.** 51

**தெளிவுரை:** மனமே! தலைவன் கூறிய அப்பூங்கொடி போன்ற பெண் கடல்சூழ்ந்த நிலவுலகம் புகழும் தஞ்சை வாணனின் தென்மாறை நாட்டு மூங்கில் வேலியினை உடைய தினைப்புனம் சூழ்ந்திருக்கும் மணம் மிக்க பெரிய சோலையைச் சார்ந்து நின்று, வீரம் இல்லாதவர்களுக்கும் வீரத்தைப் பிறக்கவைத்த என் தலைவனின் மனத்தில் இருக்கின்ற கலை அறிவாகிய நீரைக் குடித்து நிலைகொண்டு பூரித்துப் பெருத்திருக்கும் செவ்விளநீர் போன்ற முலைகளையும் தாங்கி விளையாடிக் கொண்டிருக்குமோ என்று நினைத்துக் கொண்டு சென்றான்.

## இறைவியைக் காண்டல்

பாங்கன் தலைவியைக் காணுதல்

**கானேய் அளகங் கரும்புய லேயியல் கார்மயிலே**
**மானே விழிமுக மாமதி யேதஞ்சை வாணன் வெற்பில்**
**தேனேய் தொடையலச் சேயனை யான்சொன்ன சேயிழையாள்** 52
**தானே இவளிது வேஇட மாகிய தண்புனமே.**

**தெளிவுரை:** மனமே! தஞ்சை வாணனின் மலையில் இருக்கும் முருகக் கடவுளைப்போல வண்டுகள் சூழும் மாலையினை உடைய எம் தலைவன் கூறிய இடமாகிய குளிர்ந்த தினைப்புனம் இதுவே. தலைவிக்கு கருமை நிறமான மேகமே கூந்தலாக இருக்கிறது. கார்காலத்து மயிலின் தோற்றமே அவளுடைய தோற்றமாக இருக்கிறது. இவளுடைய விழிகள் மான் விழிகளாகும். முழு நிலவே முகமாக இருக்கிறது. அதனால் தலைவன் கூறியவள் இவளேதான்.